
இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

## YESUVAI THINAM PARKIREN

VOL 26 ISSUE 01 JANUARY 2026

ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-




இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிக்கை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்

WWW.JESUSLIVES.IN


ஜனவரி
01
செம்பட்டியில்
புத்தாண்டு வாக்குத்தத்த
ஆசீர்வாதக்
கூட்டம்
2026
வியாழக்கிழமை
மதியம் 3:00 PM
6:00 PM
இடம்:
வானத்தின் வாசல் சுவிசேஷ
மையம் செம்பட்டி, திண்டுக்கல்.
EVG. VINCENTRAJ
EVG. KALAVINCENT
தொடர்புக்கு : 94980 00449 , 94428 00449


ஜனவரி
9,10
செம்பட்டியில்
Jesus Lives MINISTRIES
ஆசீர்வாத
உபவாச ஜெபம்
காலை 9:30 AM முதல்
மதியம் 2:00 PM வரை
வெள்ளி
சனிக்கிழமை
இடம்: வானத்தின் வாசல்
சுவிசேஷ மையம் செம்பட்டி, திண்டுக்கல்.
தொடர்புக்கு : 94980 00449 , 94428 00449

# ஆசிரியர் மடல்


ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் இயேசுவை தினம் பார்க்கிறேன் பத்திரிக்கை வாசகர்கள் அனைவருக்கும் இயேசு வாழ்கிறார் குடும்பத்தின் சார்பாக இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கர்த்தர் நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளது என்றவர் இந்த புதிய வருஷத்திலும் மீகா 7:15 – ல் சொல்லப்பட்டுள்ளபடி நீ எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளில் நடந்தது போலவே உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன் என்கிறார். இந்த வருஷம் அவருடைய அதிசயங்களை உங்கள் வாழ்க்கையில் காணப்பண்ணுவார்.

கடந்த நாட்களில் நம்முடைய மாதஇதழ் சரியாக வெளிவர முடியாமல் பல பிரச்சனைகளைச் சந்தித்தோம். ஆனால் இனி அப்படி வராதபடிக்கு ஒவ்வொரு மாதமும் அச்சடித்து அனுப்ப தேவன் கிருபை செய்வார். உலகம் வேகமாய் ஓடிக் கொண்டிருக்கிறது.

அப்படிப்பட்ட இந்த உலகத்தில் ராஜ்யத்தின் சுவிசேஷத்தை நாமும் தீவிரமாக அறிவிக்க வேண்டும். அதற்கு ஆண்டவராகிய தேவன் எங்களை வல்லமையாக பயன்படுத்த ஜெபித்துக் கொள்ளுங்கள். அவருடைய திட்டமும் தரிசனமும் நமக்கு கொடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு நாளும் அவரின் விருப்பத்தை நாம் நிறைவேற்ற வேண்டும். கர்த்தருக்குச் சித்தமானால் நாம் தொடர்ந்து சுவிசேஷ ஜெபமுகாம்களை நடத்தவும், ராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவிக்கவும், இந்த வருஷமும் சுவிசேஷ பயிற்சி பள்ளிகளை நாம் நடத்த வேண்டும். அதே போல் தேவன் நமக்கு கொடுத்த வானத்தின் வாசல் சுவிசேஷ மையத்திற்காகவும், ஒவ்வொரு மாதமும் அங்கு நடைபெறும் ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். இன்னும் தேவன் அங்கு எல்லைகளை விரிவுபடுத்த வேண்டும். மேலும் சோஷியல் மீடியாவில் நாம் நடத்துகின்ற கர்த்தாவே என்னை கைதூக்கி விடும் என்ற நிகழ்ச்சிக்காகவும், இயேசுவை தினம் பார்ப்போம் என்ற நிகழ்ச்சிக்காகவும், பத்திரிக்கை ஊழியத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இந்த வருஷம் தேவன் தந்த வாக்குத்தத்தத்தின்படி அற்புதங்கள், அடையாளங்கள், அதிசயங்கள் நம்முடைய ஊழியத்தில் நடக்கவேண்டும். தொடர்ந்து ஜெபத்தாலும் காணிக்கையினாலும் இந்த ஊழியத்தை தாங்கி உதவுங்கள். கர்த்தருடைய மாறாத கிருபை நம்மோடு இருப்பதாக.



இயேசுவின் பணியில்

L. Vincent

(சகோ. L. வின்சென்ட்ராஜ்)

**இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

சகோதரர்
L.வின்சென்ட்ராஜ்

# உன்னை அதிசயங்களைக் காணப் பண்ணுவேன்.



ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் சார்பாக புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

நீ எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளில் நடந்தது போலவே உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன். மீகா 7:15.

தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த புதிய ஆண்டிற்குள் பிரவேசிக்கிற உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். கடந்த நாட்களிலும் சென்று போன மாதங்களிலும், வருஷங்களிலும் நம்மை அற்புதமாய் காத்து அதிசயமாய் நடத்தி மீண்டும் ஒரு புதிய வருஷத்திற்கு கடந்து வர தேவன் அநுக்கிரகம் பண்ணினார். இந்த புதிய வருஷத்திற்குள்ளே போகின்ற நமக்கு ஆண்டவர் வாக்குக் கொடுத்திருக்கிறார் உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன் என்று. அது எப்படிப்பட்ட அதிசயம், அது எப்படிப்பட்ட அற்புதம் என்றால் யாத் 34:10-ல் சொல்லப்பட்டுள்ள வார்த்தையின்படி தான் இருக்கும். அதற்கு அவர் இதோ, நான் ஒரு உடன்படிக்கை பண்ணுகிறேன், பூமியெங்கும் எந்த ஜாதிகளிடத்திலும் செய்யப்படாத அதிசயங்களை உன் ஜனங்கள் எல்லாருக்கு முன்பாகவும் செய்வேன், உன்னோடேகூட இருக்கிற ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய செய்கையைக் காண்பார்கள். உன்னோடேகூட இருந்து, நான் செய்யும் காரியம் பயங்கரமாயிருக்கும் என்றார். யாருக்கோ செய்த அதிசயங்கள் அல்ல, எப்பவோ செய்த அதிசயங்கள் அல்ல, இன்றைக்கு உங்கள் வாழ்க்கையில் இந்த புதிய வருஷத்திலே இதுவரை நீ கண்டிராத, கேள்விப்படாத அற்புதங்களை, அதிசயங்களை நான் உனக்குச் செய்வேன் என்றார்.

இன்றைக்கு நமக்கு வருகின்ற பாடுகள், போராட்டங்களில் தேவனுடைய அற்புதங்கள், அதிசயங்கள் நடக்காமல், நாம் எந்த ஒரு காரியத்திலும் முன்னேறவோ, விடுதலை யாகவோ முடியாது. ஆகவேதான் இந்த 2026 ஆம் வருஷத்திலே நான் உன்னை இதுவரை நீ பார்த்திராத, கேட்டிராத அதிசயங்களைக் காணப் பண்ணுவேன் என்கிறார். இந்த பூமியில் நம்முடைய தேவனைப் போல் அற்புதங்களை அதிசயங்களைச் செய்ய வேறு யாராலும் முடியாது. எந்த மனிதனாலேயும், எந்த விஞ்ஞானத்தினாலேயும் நடக்காது. கர்த்தர் ஒருவரே அதிசயங்களைக் காணச் செய்கிறவர், அற்புதங்களை செய்கிறவர். ஆகவேதான் யோபு பக்தன் தன்னுடைய நிந்தையிலே, இழப்பிலே, போராட்டத்திலேயிலிருந்து மீண்டுவந்த யோபு சொல்லுகிறார் யோபு 5:9-ல் ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார் என்று. ஏதோ ஒன்று, இரண்டை செய்து விட்டு இதை வைத்து வாழ்ந்து கொள், பிழைத்துக் கொள் என்று சொல்லுகிற தேவன் அல்ல. அவர் எண்ணி முடியாத அதிசயங்களைச் செய்கிறவர். அந்த தேவன் இந்த புதிய வருஷத்தில் உங்கள் வாழ்க்கையில் புதிய காரியங்களைச் செய்வார். இனி ஒவ்வொரு காரியத்திலும் அற்புதம் நடக்காமல் அதிசயம் நடக்காமல் நாம் செயல் படவே முடியாது. யோவேல் 2:26-ல் நீங்கள் சம்பூர்ணமாய் சாப்பிட்டு திருப்தியடைந்து உங்களை அதிசயமாய் நடத்தி வந்த உங்கள்

தேவனாகிய கர்த்தரை துதிப்பீர்கள் என்றார் ஆம் தேவன் இந்த கடைசி காலத்தில் வாழ்கின்ற நமக்கு அற்புதங்களை, அதிசயங்களை செய்தாலன்றி நம்மால் எந்த ஒரு காரியத்தையும் செய்ய முடியாது, செயல்பட முடியாது.

நம்முடைய முன்னோர்களுக்கு செய்த அதே அற்புதங்களை நமக்குச் செய்ய வேண்டும். மகா வேதனையான உபத்திரவத்தின் காலத்தில் கடந்து போன கிதியோன் தேவனை நோக்கி கெஞ்சி, எங்கள் முன்னோர்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அற்புதங்கள் எங்கே என்றார். நியாயா 6:12-ல் அப்பொழுது கிதியோன் அவரை நோக்கி, ஆ என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டுவரவில்லையா என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச்சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே? என்று தனக்குத் தோன்றின தேவனுக்கு முன்பாக தன்னை தாழ்த்தி கண்ணீரோடு சொல்கிறான், ஜெபிக்கிறான். அதற்கு தேவன் அவனை பலப் படுத்தி அவனைக் கொண்டே இஸ்ரவேல் ஜனங்களுக்கு விடுதலையும், அற்புதங்களையும் செய்தார். அந்த தேவன் வரும் நாட்களில் நமக்கும் நன்மை செய்வார். அதிசயங்களைக் காணப் பண்ணுவார். மனிதன் செய்ய முடியாத, இயற்கைக்கு மேற்பட்ட அற்புதங்களை செய்வார். அதற்குத்தான் அவர் வாழ்கிறார். உயிரோடு இருக்கிறார். ஆம் அவருடைய நாமமே அதிசயமானது ஆச்சரியமானது. நியாயா 13:18-ல் பாருங்கள் என் நாமம் அதிசயம் என்றார். அந்த அதிசயமான தேவன் இன்றைக்கு, வரும் நாட்களில் உங்களுக்கு பிரமிக்கத்தக்க அதிசயங்களை செய்து உங்களை நடத்துவார். போகட்டும் யார் யாருக்கு, எப்படிப்பட்ட நிலையில் அவர் அற்புதம் செய்தார் அதிசயம் செய்தார் என்பதை பற்றி பார்ப்போம்.

## ஒன்றும் இல்லாத நிலையில் அற்புதம்

எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளில் நடந்தது போலவே உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன் என்றார் மீகா 7:15. மோசேயின் மூலமாக தேவன் சொன்ன விடுதலையை பற்றி இஸ்ரவேல் ஜனங்களுக்கு சொன்னபோது அதற்கு அவர்கள உடன்பட்டு, கீழ்ப்படிந்து புறப்பட்டு போனார்கள். போகும்போது கையில் பணமோ, பொருளோ, உணவோ, உடையோ இல்லை. அவர்களை வழிநடத்தின தேவனைத் தவிர வேறு யாருமில்லை. சமீபத்தில் மழை, புயல் வந்தபோது கொழும்பு விமான நிலையத்தில் விமானங்கள் ரத்து செய்யப்பட்டது. அங்கு டிரான்சீட் வந்த பயணிகள் மூன்றுநாள் தண்ணீரோ, உணவோ, தங்குமிடமோ இல்லாமல் மிகுந்த பாதிப்புக்கு உள்ளானார்கள். அப்பொழுது தான் நினைத்தேன் விஞ்ஞானமோ, கண்டுபிடிப்போ இயற்கையின் அழிவிலிருந்து ஜனங்களைக் காப்பாற்ற முடியவில்லை என்று. ஆனால் மோசேயோடு புறப்பட்ட லட்சக் கணக்கான ஜனங்கள் தங்குமிடத்திற்கும், உணவிற்கும் எவ்வளவு காரியம் செய்திருக்க வேண்டும். ஆனால் தேவன் அனுதினமும் அவர்களை அதிசயமாய் அற்புதம் செய்து நடத்தினார்.

காலையில் அடுப்பு பற்ற வைக்கும் வேலை இல்லை, பால் வாங்க வேண்டிய வேலை இல்லை, காய்கறிகள், தண்ணீர் வாங்க வேண்டிய வேலை இல்லை அனுதினமும் அதிசயம் அற்புதம். காட்டிலே மெத்தையோ, ஏசியோ, ஃபேனோ அவர்களுக்கு இல்லை ஒரு தகப்பன் பிள்ளையை சுமப்பது போல கர்த்தர் ஒருவரே அவர்களை நடத்தினார். அந்த தேவன் இன்றைக்கும் உயிரோடு இருக்கிறார். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். அவர் அதிசயங்கள் எல்லாம் முடிந்து போகவில்லை, நின்று விடவில்லை. இன்றைக்கும் அவருடைய பிள்ளைகளுக்கு தேவன் அற்புதங்களைச் செய்கிறார். ஆம் அவரை நம்பி, அவருடைய வார்த்தைகளைக் கேட்கிறவர்களுக்கு, அந்த வார்த்தையின்படி நடக்கிறவர்களுக்கு அதிசயங்களைச் செய்கிறார் எல்லாருக்கும் அல்ல.

சங் 88:10,12 வாசித்து பாருங்கள் மரித்தவர்களுக்கு அதிசயங்களைச் செய்வீரோ? செத்துப்போன வீரர் எழுந்து உம்மை துதிப்பார்களோ? இருளில் உமது அதிசயங்களும் மறதியின் பூமியில் உமது நீதியும் அறியப்படுமோ என்றார். இன்றைக்கு நாம் ஒரு கடனில் மூழ்கிவிட்டு அதை கட்ட முடியாமல் தவித்து, ஆண்டவரே எனக்கு

அற்புதம் செய்யுங்க என்று சொல்லுவதில்லை. தேவன் உங்கள் தேவைகளைப் பற்றாக்குறைகளை அறிந்திருக்கிறார். நீங்கள் தேவனை நோக்கி ஜெபித்தால் உங்களுக்கு அவர் அதிசயங்களைச் செய்வார். கடன் வாங்காமலே, வட்டி கட்டாமலே அவர் அதிசயம் செய்வார். பல வருஷங்களுக்கு முன் ஒரு போதகர் நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு அறுவை சிகிச்சை முடிந்தது. ஓரளவு சுகமாகி வெளியே செல்லும்போது மருத்துவமனையில் பல லட்சம் ரூபாய் பில் ஏறி இருக்குமே என்ன செய்வது என்று பயந்து கொண்டே இருந்தார். அந்த மருத்துவமனையில் எல்லா பில் தொகையையும் சொல்லி அவருக்கு ஏறக்குறைய 5 லட்சம் செலவாகிவிட்டது என்றார்கள். ஏற்கனவே நீங்கள் கட்டின பணமும், எங்களுடைய பில் தொகையும் சரியாக இருக்கிறது என்றார்கள். இந்தப் போதகருக்கு அதிர்ச்சி நான் எப்பொழுது பணம் கட்டினேன் நான் ஒன்றும் கட்டவில்லை, யாரும் எனக்கு உதவி செய்யவில்லை நன்றாக பாருங்கள் என்றார். மருத்துவமனை நிர்வாகம் சொல்லிவிட்டது உங்கள் பெயரிலே 5 லட்சம் வரவு வைக்கப்பட்டுள்ளது இப்பொழுது வரவுக்கும் செலவுக்கு சரியாக இருக்கிறது நீங்கள் போய் வாருங்கள் என்று அனுப்பிவிட்டார்கள். அப்பொழுது அந்த போதகர் விளங்கிக் கொண்டார் தேவனே இதை செய்தார் இது அதிசயம் என்றார். என்னிடத்தில் சொன்ன போது அவர் கண்ணீரோடு சொன்னார். தேவன் இந்த அதிசயங்களை செய்ய நான் கொஞ்சம் கூட தகுதி இல்லாதவன் என்றார். ஆம் அவரே நமக்காக அதிசயங்களை செய்கிறவர். ஆகவே தான் வேதாகமத்தில் ஜனங்கள் அவரை புகழ்ந்து மகிமைப்படுத்தினார்கள்.

லூக்கா 5:26-ஐ வாசித்துப் பாருங்கள் எல்லாரும் ஆச்சரியப்பட்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள். அல்லாமலும் அவர்கள் பயம் நிறைந்தவர்களாகி அதிசயமான காரியங்களை இன்று கண்டோம் என்றார்கள். மற்றும் ஒரு சகோதரன் என்னிடத்தில் வந்திருந்தார் அவர் ஒரு சிறு தொழில் செய்கிறார். வங்கியில் பல லட்சம் கடன் வாங்கி கட்ட முடியாமல் போய், தொழிலையும் இழந்து விட்டார். மிகுந்த மனவேதனையில் எப்படி வாழ்வது என்ன செய்வது யாரைப் போய் பார்ப்பது என்று கண்ணீரோடு தேவ சமூகத்திலிருந்து பல நாட்கள் உபவாசத்தோடு ஜெபித்தார். திடீரென வங்கியில் இருந்து அவருக்கு ஒரு அழைப்பு வந்தது. நீங்கள் வந்து வங்கியின் மேலாளரைப் பாருங்கள் என்று. என்ன சொல்லப் போகிறரோ எப்படி கடனை கட்டப் போகிறோமோ என்று பயத்தோடு, அவமானம் அடையப்போகிறேனோ என்று நினைத்துப்போனார். ஆனால் அந்த மேலாளர் சொன்னார் உங்கள் கடன் எல்லாம் கட்டி விட்டீர்கள் இது உங்கள் லோன் முடிந்ததற்கான அத்தாட்சி என்றார். இவருக்கு மிகுந்த ஆச்சரியம் யார் இதை கட்டியிருப்பார்கள், யார் இதை செய்திருப்பார்கள் கர்த்தரே அதிசயங்களைச் செய்கிறவர் என்றார். இந்த செய்தியை வாசிக்கின்ற என் அன்பு சகோதர, சகோதரிகளே அந்த தேவன் இன்றைக்கும் உயிரோடு இருக்கிறார், அவர் நமக்காக வாழ்கிறார், அதே அதிசயங்களை, அற்புதங்களை உங்களுக்கும் செய்வார்.

இஸ்ரவேல் ஜனங்களுக்கு 40 வருஷம் வனாந்தரத்திலும், அவர்களை கொண்டு போய் சேர்த்த தேசத்திலும் அதிசயங்களை செய்தவர், என்னென்ன அதிசயங்கள், அற்புதங்கள் செய்தார். உபா 6:10,11-ல் உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுப்பேன் என்று ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களாகிய உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தில் உன்னைப் பிரவேசிக்கப்பண்ணும் போதும், நீ கட்டாத வசதியான பெரிய பட்டணங்களையும், நீ நிரப்பாத சகல நல்ல வஸ்துக்களாலும் நிரம்பிய வீடுகளையும், நீ வெட்டாமல் வெட்டப்பட்டிருக்கிற துரவுகளையும், நீ நடாத திராட்சத்தோட்டங்களையும் ஒலிவத் தோப்புகளையும், அவர் உனக்குக் கொடுப்பதினால், நீ சாப்பிட்டுத் திருப்தியாவாய் என்றார். ஆம் இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் அற்புதம், அனுதினமும் அதிசயமான காரியங்களைக் காணச் செய்தார். அந்த தேவன் இனிவரும் நாட்களிலும், வருஷங்களிலும் நமக்கு நன்மை செய்வார். அதிசயங்களைச் செய்து நீங்கள் செய்ய முடியாதவைகளை, நீங்கள்

வாங்க முடியாதவைகளை அவர் உங்களுக்கு செய்து அதிசயமாய் நடத்துவார். வேதம் சொல்லுகிறது ஏசா 28:29-ல் இதுவும் சேனைகளின் கர்த்தராலே உண்டாகிறது.அவர் ஆலோசனையில் ஆச்சரியமானவர், செயலில் மகத்துவமானவர். நீரே அதிசயங்களைச் செய்தீர் என்ற வார்த்தையின்படி தேவன் உங்களை அற்புதமாய் அதிசயமாய் நடத்தி ஆசீர்வதிப்பாராக. இந்த 2026-ஆம் ஆண்டு உங்களுக்கு அதிசயமான வருஷமாக. ஆச்சரியமான வருஷமாக இருப்பதாக.

## அற்புதங்களை எதிர்பாருங்கள், தகுதிப்படுத்திக் கொள்ளுங்கள்

யோசு 3:5-ல் யோசுவா ஜனங்களை நோக்கி, உங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள், நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார் என்றான். சிலருக்கு உடனே அற்புதம் நடக்கும் காரணம் ஆபத்து. அவசர காலத்தில் நடக்கும். ஆனால் பலருக்கு நாளைக்கு நாளைக்கு என்றார். பல நாட்கள், பல மாதங்கள் கூட ஆகலாம். மார்த்தாள் மரியாளுக்கு தேவன் உடனே அற்புதம் அதிசயம் செய்யவில்லை நான்கு நாட்கள் கழித்து தான் அற்புதம் நடந்தது. காரணம் தேவனுடைய மகிமையை அவர்கள் உணர வேண்டும் என்பதற்காக. கானாவூர் திருமணத்தில் உடனே அற்புதம் நடந்தது காரணம் திருமணம் முடிவதற்குள் காரியம் நடக்க வேண்டும் இல்லை என்றால் அவமானம் அடைந்து விடுவார்கள் என்று தேவன் விரைவில் அதிசயம் செய்தார். சிலருக்கு 12 வருஷம் கழித்து அற்புதம் நடந்தது. பெரும்பாடுள்ள பெண் சுகம் அடைந்தாள். மாற்கு 5:25,26,34 வசனங்களில் பார்க்கிறோம். சிலருக்கு 38 வருடமானது யோவான் 5:5,6 வசனங்களில் பார்க்கிறோம் 38 வருஷமாய் படுத்த படுக்கையாய் கிடந்தவனை இயேசு தேடிப்போய் அவனை தொட்டு சுகமாக்கினார். அவன் படுத்த படுக்கையை தூக்கிக் கொண்டு நடந்தான் இயேசு அற்புதம் செய்தார்.

இன்றைக்கு உனக்கு என்ன அற்புதம் தேவை, என்ன அதிசயம் தேவை. எப்பொழுது தேவை என்பதை அவர் அறிந்திருக்கிறார். ஏற்ற நேரத்தில், சரியான நேரத்தில் உங்களுக்கு அற்புதம் செய்வார். சில இடங்களில் நம்பிக்கை இல்லாத, விசுவாசிக்காத ஜனங்களுக்கு தேவன் அற்புதம் செய்ய முடியாது. மாற்கு 6:5,6-ல் அங்கே அவர் சில நோயாளிகள்மேல் கைகளை வைத்து, அவர்களைக் குணமாக்கினதேயன்றி, வேறொரு அற்புதமும் செய்யக்கூடாமல், அவர்களுடைய அவிசுவாசத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார் காரணம் தேவனுடைய மகிமையை, அற்புதத்தை அவர்கள் நம்பவில்லை, விசுவாசிக்கவில்லை. விசுவாசித்தால் தான் தேவனுடைய மகிமையை, அற்புதத்தை காண முடியும். இயேசு சொன்னார் யோவான் 11:40-ல் இயேசு அவளை நோக்கி மார்த்தாளே நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையை காண்பாய் என்றார். ஆம் விசுவாசித்தால் தான் தேவனுடைய அற்புதத்திற்கு பாத்திரவானாக இருந்தால் தான் தேவன் உங்களுக்கு அற்புதம் அதிசயம் செய்ய முடியும். தகுதி இல்லை என்றால் பாத்திரவானாக இல்லை என்றால் அது திரும்ப எடுத்துக் கொள்ளப்படும். இயேசு சொன்னார் யோவா 5:14-ல் அதற்குப்பின்பு இயேசு அவனை தேவாலயத்திலே கண்டு இதோ, நீ சொஸ்தமானாய், அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே என்றார். ஆம் நாம் தேவனுடைய அற்புதங்களுக்கும், அதிசயங்களுக்கும் தகுதியுள்ளவர்களாகி நன்றி உள்ளவர்களாய் இருக்க வேண்டும். அப்போது தான் அந்த அற்புதங்கள் நிலைக்கும், தலைமுறை தலைமுறையாய் தொடரும். இன்றைக்கு இந்த செய்தியின் மூலமாக இணைந்திருக்கிற என் அன்பு சகோதர, சகோதரிகளே நம் வாழ்க்கை எப்படி இருக்கிறது? தேவனுடைய நன்மைகள், அற்புதங்கள், அதிசயங்கள் நமக்குள் நடக்கிறதா? அது நிலைத்திருக்கிறதா? இல்லை என்றால் ஏதாவது ஒரு நேரம் நடந்து விட்டு நின்று விடுகிறதா? இன்றைக்கு உங்கள் உள்ளத்தை ஆராய்ந்து பாருங்கள்.

இஸ்ரவேல் ஜனங்களுக்கு வனாந்திர யாத்திரைப் பயணம் முடிந்த உடனே தேவனுடைய அற்புதம் நின்று விட்டது. காரணம் தேவனுடைய கிரியைகளை மறந்து நன்றி

இல்லாமல் போனார்கள். ஆகவே தான் சங் 78:11-ல் அவருடைய செயல்களையும் அவர் தாங்களுக்கு காண்பித்த அதிசயங்களையும் மறந்தார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. அதனால் தேவனுடைய நன்மைகள் அற்புதங்கள், அதிசயங்கள் அவர்களுக்கு தொடரவில்லை முடிந்து போனது. ஆகவே தான் தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு சொல்லுகிறார் உங்களை பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள் நாளைக்கு தேவன் உங்களுக்கு அற்புதம் செய்வார் என்றார். தேவன் நம்மை சில சமயங்களில் சிட்சையின் பாதையில் நடத்துகிறார். உபா 8:2,3 வசனங்களைப் பாருங்கள் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிறுமைப்படுத்தும்படிக்கும், தம்முடைய கட்டளைகளை நீ கைக்கொள்வாயோ கைக்கொள்ளமாட்டாயோ என்று அவர் உன்னைச் சோதித்து, உன் இருதயத்திலுள்ளதை நீ அறியும்படிக்கும், உன்னை இந்த நாற்பது வருஷமளவும் வனாந்தரத்திலே நடத்திவந்த எல்லா வழியையும் நினைப்பாயாக. அவர் உன்னைச் சிறுமைப்படுத்தி, உன்னைப் பசியினால் வருத்தி, மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்பதை உனக்கு உணர்த்தும்படிக்கு, நீயும் உன் பிதாக்களும் அறியாதிருந்த மன்னாவினால் உன்னைப் போஷித்தார். உன் இருதயத்தில் இருக்கிறதை நீ போய் கண்டுபிடிக்கும்படி உன்னை சிறுமைப்படுத்தி, சீர்படுத்தி, பரிசுத்தப்படுத்தி நடத்தினார். ஆகவே தான் நாளைக்கு என்று ஒரு நிபந்தனையை தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு வைத்தார். உங்களை ஆராய்ந்து பார்த்து சரி செய்து கொண்டால் இன்றைக்கு தேவன் உங்களுக்கு அற்புதம் செய்து, அதிசயங்களைச் செய்து அவருடைய நன்மையும், கிருபையும் உங்களையும் என்னையும் நிரம்பி வழியும்படிச் செய்வார். அதற்குத்தான் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளில் நடந்தது போலவே உன்னை அதிசயங்களைக் காண பண்ணுவேன் என்றார். என் ஆண்டவராகிய தேவன் இந்த புதிய வருஷத்திலே உங்களை அற்புதமாய் ஆசீர்வதித்து நடத்துவாராக ஆமென்.

# ஜெபம்

அன்பு இரக்கமும் உள்ள எங்கள் நல்ல பிதாவே, உம்மை நன்றியுள்ள இருதயத்தோடு ஸ்தோத்தரிக்கிறோம், துதிக்கிறோம். கடந்து வந்த பாதைகளில் எல்லாம், சென்று போன மாதங்களிலும், வருஷங்களிலும் எங்களை அற்புதமாய் நடத்தினீரே உமக்கு நன்றி. இப்பொழுதும் எங்களை உயிரோடு காத்து மீண்டும் ஒரு புதிய வருஷத்தை எங்களுக்கு தந்தீரே உமக்கு நன்றி. எங்களை முற்றிலும் இந்த புதிய வருஷத்திலே வழிநடத்த ஒப்படைக்கிறோம். நடக்கிறவனுடைய நடைகள், பாதைகள் அவனால் ஆகிறது அல்ல, அவனை நடத்துகிறவர் தேவனாகிய கர்த்தரே என்று சொல்லி இருக்கிறீரே எங்களையும் எங்கள் குடும்பத்தையும் எங்களுடைய காரியங்களையும் முற்றிலும் அர்ப்பணிக்கிறோம். எங்களை தயவாய் ஆண்டு நடத்தும். எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளில் நடந்தது போலவே உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன் என்றீரே எங்களுக்கும் இந்த வருஷத்திலே உம்முடைய ஏராளமான அதிசயங்கள், அற்புதங்கள் நடப்பதாக. மனிதன் அப்பத்தினால் மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தைகளினாலும் பிழைப்பான், வாழ்வான் என்றீரே, உம்முடைய வார்த்தையின்படி, உம்முடைய வேதத்தில் உள்ள அதிசயங்களை காணும்படி அற்புதம் செய்வீராக. அதிசயம் நடப்பதாக. எந்த ஒரு காரியத்திலும் நாங்கள் குறைவுபடாதபடிக்கு வெட்கப்படாதபடிக்கு எங்களுக்கு நன்மை உண்டாவதாக. உம்முடைய பிள்ளைகள் செய்கிற வேலைகள், தொழில்கள், வருமானங்கள், படிப்புகள், ஊழியங்கள் எல்லாம் ஆசீர்வதிக்கப்படுவதாக. ஒவ்வொரு நாளும் உம்முடைய அதிசயங்கள் நடப்பதாக. இயற்கைக்கு மேற்பட்ட அற்புதம் நடப்பதாக. இந்த புதிய வருஷம் உம்முடைய பிள்ளைகளுக்கு ஒரு மேன்மையான வருஷமாக இருப்பதாக. ஆசீர்வதியும் வழிநடத்தும். நீர் இந்த ஜெபத்தை கேட்பதற்காக உமக்கு நன்றி. உம்முடைய மனதுருக்கம் ஒவ்வொருவருக்கும் அதிசயங்களை செய்யப்போவதற்காக உமக்கு நன்றி. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் எங்கள் உயிருள்ள நல்ல பிதாவே ஆமென் ஆமென்.

சகோதரி.
கலா வின்சென்ட்ராஜ்

# அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை




ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் சகோதரிகளுக்கு இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

இந்த செய்தியின் வழியாக உங்களோடு தொடர்பு கொள்ள செய்த தேவனுக்கு நன்றி! புல 3:22-ல் நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே. அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை என்று எரேமியா தன் புலம்பல்களை எல்லாம் சொல்லி முடித்து, நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே. அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை என்கிறார். இரக்கம் என்று சொல்லாமல் இரக்கங்கள் என்று சொல்லுகிறார். கர்த்தருடைய இரக்கங்கள் ஒன்றல்ல. இரண்டல்ல சங் 119:156-ல் கர்த்தாவே உம்முடைய இரக்கங்கள் மிகுதியாயிருக்கிறது என்கிறார். நான் ஒருமுறை இரங்கி விட்டேன். இரண்டு முறை இரக்கம் காட்டினேன். இனி உனக்கு நான் இரங்க மாட்டேன் என்பவரல்ல. அவருடைய இரக்கங்கள் மிகுதியாயிருக்கிறது. பேதுரு இயேசுவிடத்தில் வந்து என் சகோதரன் எனக்கு விரோதமாய் குற்றம் செய்து வந்தால் நான் எத்தனை தரம் மன்னிக்க வேண்டும் ஏழு தரம் மட்டுமா என்று கேட்டபோது ஏழு தரம் மாத்திரமல்ல ஏழெழுபது தரம் மட்டும் என்று உனக்கு சொல்லுகிறேன் என்று பேதுருவுக்கு ஒரு உவமையை இயேசு சொன்னார். நான் உனக்கு இரங்கினது போல நீ உன் உடன் ஊழியனுக்கு இரங்க வேண்டாமோ என்றும், ஏழு எழுபது தரம் மனிதர்கள் இரங்க வேண்டும் என்று சொன்ன அவரது இரக்கங்கள் குறைந்ததாய் இருக்குமோ அவரிடத்தில் இரக்கங்கள் மிகுதியாயிருக்கிறது அதற்கு முடிவில்லை.

## சிறுமைப்பட்டிருக்கிறவர்கள் மேல் இரக்கமாயிருப்பார்



சிறுமைப்பட்டிருக்கிறவர்கள் மேல் இரக்கம் காட்ட பலர் இருப்பதில்லை. ஆனால் கர்த்தருடைய கண்கள் அப்படிப்பட்டவர்கள் மேல் நோக்கமாய் இருக்கிறது. ஏசா 49:13 வானங்களே! கெம்பீரித்து பாடுங்கள். பூமியே களிகூரு பர்வதங்களே! கெம்பீரமாய் முழங்குங்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்துக்கு ஆறுதல் செய்தார். சிறுமைப்பட்டிருக்கிற தம்முடையவர்கள் மேல் இரக்கமாயிருப்பார் என்று ஏசாயா சொல்கிறார். சீயோனோ கர்த்தர் என்னை கைவிட்டார். ஆண்டவர் என்னை மறந்தார் என்று சொல்கிறாள். ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் இருப்பாளோ! தன் பாலகனை அவள் மறந்து போவாளோ! அப்படியே அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை என்று ஆண்டவர் சொல்கிறார்.

வாக்குத்தத்தமும், தரிசனமும் பெற்றவன் யோசேப்பு! ஆனால் அவன் சந்தித்த சவால்கள் வாக்குத்தத்தங்கள் எல்லாம் தொலைந்து போய் விட்டது போல அவனை என்ன வைத்தன. தரிசனம் எல்லாம் கருகி, காய்ந்து ஒன்றுமில்லாதது போல் ஆகிவிட்டது. அவன் குழியில் போடப் பட்டதும், விற்கப்பட்டதும், அடிமையாய் வேலை பார்த்து பொய் குற்றம் சாட்டப்பட்டு சிறைக்குள் கிடந்த போது கர்த்தர் என்னை கைவிட்டு விட்டாரே! மறந்திட்டாரே, என்று என் துயரம் மாறப்போகிறது. நான் வெளியே வருவேனா!


அப்பா. அண்ணன்மார்களை பார்க்காவிட்டாலும் இந்த தேசத்திலே வேலை பார்த்தாவது பிழைத்திருப்பேனே! ஏன் எனக்கு இந்த சிறை? இதிலிருந்து மீள்வது எப்படி என்று கூட எனக்கு தெரியவில்லை என்று கலங்கியிருப்பான். ஆனால் அப்படி சிறுமை அனுபவித்த யோசேப்பின் மேல் கர்த்தர் இரக்கமாயிருந்தார். பார்வோனின் கனவிற்கு அர்த்தம் சொல்ல வைத்து எகிப்திற்கே அதிகாரியாய் தேவன் உயர்த்திவிட்டார். நாமும் இதே விதமாய் சிறுமையான பாதையில் கடந்து போய் கொண்டு இருக்கலாம். எப்போ ஆண்டவரே! என்று நம்பிக்கை எல்லாம் கூட இழந்து போய் இருக்கலாம். நீங்கள் காப்பாற்றப்படவோ. தப்புவிக்கப்படவோ ஒரு வழியும் இல்லாதிருக் கலாம். ஆனால் சிறுமைப்பட்டவர்கள் மேல் இரக்கமாயிருக்கிற கர்த்தர் உங்கள் சிறுமைகளை நீக்கி நீங்கள் நினைத்தே பார்த்திராத உயரத்திற்கு கொண்டு செல்ல போகிறார். எனவே மனம் கலங்காதிருங்கள்.

## அவருக்கு பயந்தவர்களுக்கு இரக்கம் செய்கிறார்



ஆண்டவருக்கு பயந்தவர்கள் மேல் அவர் இரக்கம் தலைமுறை தலைமுறையாய் உள்ளது. லூக் 1:50 மரியாள் பாடின பாட்டில் இந்த வார்த்தை உள்ளது. என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது என் ஆவி இரட்சகராகிய தேவனில் களிகூறுகிறது. இது முதல் எல்லா சந்ததியும் என்னை பாக்கியவதி என்பார்கள் என்று சொல்லி விட்டு அவர் இரக்கம் அவருக்கு பயந்தவர்கள் மேல் தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது என்கிறாள். எகிப்தின் ராஜா சிப்பிராள். பூவாள் என்ற மருத்துவச் சிக்களோடு பேசி. எபிரேய பெண்களுக்கு மருத்துவம் செய்யும்போது பிறப்பது ஆண் பிள்ளையானால் கொன்று போட கட்டளை யிட்டான். யாத் 1:17-ல் மருத்துவச்சிகளோ தேவனுக்கு பயந்ததினால் ராஜா கட்டளைப்படி நடவாமல் ஆண் பிள்ளைகளை உயிரோடு காப்பாற்றினார்கள். 21,22 ஆம் வசனம் அதினிமித்தம் மருத்துவச்சிகளுக்கு தேவன் நன்மை செய்தார். அவர்களுடைய குடும்பங்கள் தழைக்கும்படி செய்தார் என்று வாசிக்கிறோம். சொல்லப்பட்டது ராஜாவிடம் இருந்து வந்த கட்டளையானாலும் அந்தப் பெண்கள் கர்த்தருக்கே பயந்தார்கள். கர்த்தர் அவர்கள் மேல் இரக்கமாயிருந்தார். நன்மை செய்து அவர்கள் குடும்பங்களை தழைக்கச் செய்தார். அதேபோல நம் வாழ்விலும் எத்தனை பெரிய எதிர்ப்புகள் இருந்தாலும். நாம் கர்த்தருக்கு பயந்து வாழும் போது தேவனுடைய இரக்கத்தைப் பெறுவோம். அதனால் தான் ஆண்டவர் என்னிடத்தில் அன்பு கூர்ந்து என் கற்பனைகளை கைக்கொள்ளுகிறவர்களுக்கு ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கம் செய்கிறவரா யிருப்பேன் என்றார். உபா 5:10.

## இரக்கம் பெற என்ன செய்ய வேண்டும்



தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான் அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான். நீதி 28:13.

இரண்டு விதமான மனிதர்கள் ஒன்று மறைக்கிறவர்கள். இன்னொன்று அறிக்கையிடுகிறவர்கள் என்று ஆண்டவர் காண்பிக்கிறார். பரிசேயன் தன்னிடத்தில் இருக்கும் நல்ல காரியத்தை எண்ணிக்கொண்டு தன்னை நீதிமான் என்று நினைத்தான். ஆனால் ஆயக்காரனோ தன் அநீதியான காரியத்திற்கு தான் என்று பொறுப்பேற்றுக்கொண்டு இந்த பாவி என் மேல் கிருபையாயிரும் என்றான். இரக்கத்தைப் பெற்றது ஆயக்காரன். அதனால்தான் எதையும் மறைக்காமல் இளைய மகன் பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு விரோதமாகவும் பாவம் செய்தேன்.

உமது மகனாக அல்ல வேலைக்காரனாக வைத்துக் கொள்ளும் என்று சொன்னபோது இரக்கத்தைப் பெற்ற மகனாக தகப்பன் ஏற்றுக் கொண்டார். தான் பாவம் செய்ய நேர்ந்த போது தாவீது சங் 51:1 தேவனே! உமது கிருபையின்படி எனக்கு இரங்கும். உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னை சுத்திகரியும் என்றான். சங் 41:4 கர்த்தாவே என் மேல் இரக்கமாயிரும் உமக்கு விரோதமாய் பாவம் செய்தேன் என் ஆத்துமாவை குணமாக்கும் என்றான். பாவம் செய்கிற ஆத்துமா பெலனற்று போகிறது. நோய் கொண்டிருக்கிறது அந்தப் பாவத்தை. ஆத்துமா சுத்திகரிக்கப்படும்படி நாம் அறிக்கை செய்கிற போது தான் அது குணமாகிறது. சுத்தமாகிறது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம். அது தான் நம்மை பாவமற கழுவுகிற. சுத்திகரிக்கிற தாயிருக்கிறது. சங் 103:3,4,5 அவர் உன் அக்கிரமங்களை எல்லாம் மன்னித்து உன் நோய்களை எல்லாம் குணமாக்கி. உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு உன்னை கிருபையினாலும். இரக்கங்களினாலும் முடிசூட்டி நன்மையினால் உன் வாயை திருப்தி யாக்குகிறார். கழுகுக்கு சமானமாய் உன் வயது திரும்ப வாழ வயது போலாகிறது என்று சங்கீதக்காரன் சொல்கிறான்.

தானியேல், நெகேமியா போன்றவர்கள் தங்களைத் தாழ்த்தி தன்னுடைய பாவங்களை அறிக்கையிட்டு நாங்கள் பாவம் செய்த போது அந்நிய தேச ஜனங்களிடம் ஒப்படைத்தீர். ஆகிலும் நெகே 9:31 உம்முடைய மிகுந்த இரக்கங்களின்படியே அவர்களை நிர்மூலமாக்காமலும் அவர்களை கைவிடாமலும் இருந்தீர். நீர் கிருபையும் இரக்கமும் உள்ள தேவன் என்றான். தானியேலின் ஜெபத்தில் தானி 9:10,18 எங்கள் தேவனாகிய ஆண்டவரிடத்தில் இரக்கங்களும், மன்னிப்புகளும் உண்டு. எங்கள் நீதிகளை அல்ல உம்முடைய மிகுந்த இரக்கங்களை நம்பி எங்கள் விண்ணப்பங்களை உமக்கு முன்பாக செலுத்துகிறோம் என்றான். இப்படி அறிக்கை செய்கிற நாம் இரக்கம் பெறுவோம்.

சங் 79:8,9 பூர்வ காலத்து அக்கிரமங்களை எங்களுக்கு விரோதமாக நினையாதேயும். உம்முடைய இரக்கங்கள் சீக்கிரமாய் எங்களுக்கு நேரிடுவதாக. நாங்கள் மிகவும் தாழ்த்தப்பட்டு போனோம். எங்களை இரட்சிக்கும் தேவனே! நீர் உமது நாமத்தின் மகிமையினிமித்தம் எங்களுக்கு உதவி செய்து. உமது நாமத்தினிமித்தம் எங்களை விடுவித்து எங்கள் பாவங்களை நிவர்த்தியாக்கும். இந்த சங்கீதக்காரன் எப்படி இரக்கத்திற்காக கெஞ்சுகிறான் என்று பாருங்கள். பூர்வகாலத்து அக்கிரமங்களை எங்களுக்கு விரோதமாய் நினையாதேயும். உம்முடைய இரக்கங்கள் சீக்கிரமாய் எங்களுக்கு நேரிட வேண்டும் தாமதம் இல்லாமல் இரக்கம் செய்யும் ஆண்டவரே! ஏனென்றால் நாங்கள் மிகவும் தாழ்த்தப்பட்டு போனோம். எங்களை இரட்சிக்கும் தேவனே உம்முடைய நாமத்தினிமித்தம் உதவி செய்து எங்களை விடுவித்து. எங்கள் பாவங்களை எல்லாம் நிவிர்த்தியாக்கும் என்றான். இவ்விதமாக அறிக்கையிட்டு ஜெபிக்கிற. கெஞ்சுகிற எவரையும் ஆண்டவர் இயேசு தள்ளி விடுகிறதில்லை அவர்களுக்கு இரங்குகிறார்.

## தேவனுக்கு முன்பாக இரக்கம்



சோதோம், கொமோரா பட்டணத்துக்கு எதிராக தேவகோபம் எழும்பினபோது அதை அழிக்கும் முன்பாக தூதர்களை அந்த பட்டணத்திற்கு தேவன் அனுப்பினார். அங்கே லோத்தை காப்பாற்ற தூதர்கள் உன் ஜீவன் தப்ப மலைக்கு ஓடிப்போ! என்ற போது அவன் தாமதம் பண்ணினான். ஆதி 19:16-ல் அவன் தாமதித்துக் கொண்டிருக்கும் போது கர்த்தர் அவன் மேல் வைத்த இரக்கத்தினாலே அந்த புருஷர் அவன் கையையும். அவன் மனைவி. இரண்டு குமாரத்திகள் கையையும் பிடித்து அவனை பட்டணத்திற்கு வெளியே கொண்டு போய் விட்டார்கள் என்று வாசிக்கிறோம். மிகப்பெரிய அழிவு பட்டணத்தின் மேலும்.

ஜனங்கள் மேலும் வரும்போது லோத்தின் மேல் தேவன் வைத்த இரக்கம் அவனுடைய மனைவி, பிள்ளைகளை அக்கினிக்கு வெளியே கொண்டு வந்தது. இன்றைக்கு நாம் வாழும் இந்த பொல்லாத உலகத்திலே இருக்கிற சீர்கேடுகள் எல்லாவற்றினாலும் தேவகோபம் ஜனத்தின் மேல் வருகையில் உங்கள் மேல், என் மேல் வைத்த தேவனுடைய இரக்கம் மிகப்பெரியது. அந்த இரக்கம் நம்மை அழிவுக்கு தப்புவித்து தீமைக்கு விலக்கி நம்மை, குடும்பத்தை உயிரோடு காக்கும்.

பவுல் அப்போஸ்தலன் ரோம 12:1-ல் சகோதரரே நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை என்று சொல்கிறார். தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு சொல்கிறேன். உயிர் வாழும் இந்த நாட்களிலே நீங்கள் உங்கள் சரீரங்களை, அவயவங்களை தேவனுக்கு பிரியமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும். மரித்த பிறகு நாம் இந்த இரக்கத்தைப் பெற முடியாது. எனவே தேவனுடைய இரக்கங்கள் உங்கள் முன் இருக்கும் போதே சிலுவைக்கு முன்னால் உங்களை தாழ்த்தி, நீங்கள் பார்த்ததை, பேசியதை, நினைத்ததை ஒத்துக்கொண்டு, இனி நான் அப்படி செய்யப் போவதில்லை. இந்த சரீரத்தை அவயவத்தை உம்மிடம் ஒப்படைக்கிறேன் என்று சொல்லுங்கள். தேவனுடைய இரக்கம் நம்மில் கடந்து வரும்.

சங் 119:77-ல் நான் பிழைத்திருக்கும்படிக்கு உமது இரக்கங்கள் எனக்கு கிடைப்பதாக! உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி என்று சங்கீதக்காரன் சொல்கிறான். வேதம் தான் நம்மை தேவனுடைய இரக்கத்தைப் பெற உந்தி தள்ளுகிறது. நீ போ! உன் தகப்பன் உன்னை தள்ளமாட்டார். அவர் இரக்கம் மிகவும் பெரியது. அவர் உன்னை மன்னிப்பார். உன்னை கைவிட மாட்டார். அவர் உன்னை நேசிக்கிறார். அவர் கரத்தினுள் ஓடு! என்றெல்லாம் இந்த வேதம் நம்மை தேவனுடைய இரக்கங்களுக்குள் நடத்துகிறது. எனவே அர்த்தம் புரியுதோ இல்லையோ தினமும் பலமுறை வேதத்தை திறந்து வாசியுங்கள். இரக்கம் பெறுவீர்கள்.

மீகா 7:18,19 தமது சுதந்திரத்தில் மீதியானவர்களுடைய அக்கிரமத்தை பொறுத்து, மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்? அவர் கிருபை செய்ய விரும்புகிறபடியால் அவர் என்றென்றைக்கும் கோபம் வையார். அவர் திரும்ப நம்மில் இரங்குவார். நம்முடைய அக்கிரமங்களை அடக்கி நம்முடைய பாவங்களை எல்லாம் சமுத்திரத்தின் ஆழத்தில் போட்டு விடுவார். அவர் நமக்கு கிருபை செய்ய விரும்புகிறார் என்றால் நமக்கு இரக்கம் செய்ய விருப்பமாயிருக்கிறார். அந்த இரக்கத்தின் செட்டைகளுக்குள் வாருங்கள்.

## மனுஷருக்கு முன்பாக இரக்கம்



தேவனுக்கு முன்பாக இரக்கம் பெற்ற எவரும் மனுஷர் முன்பாக இரக்கத்தை சுலபமாக பெற முடியும். நெகே 1:11 ஆண்டவரே, உமது அடியானின் ஜெபத்தையும், உமது நாமத்துக்கு பயப்பட வேண்டும் என்று விரும்புகிற உமது அடியாரின் ஜெபத்தையும் உமது செவிகள் கவனித்திருப்பதாக! இன்றைக்கு உமது அடியானுக்கு காரியத்தை கைகூடி வர பண்ணி இந்த மனுஷனுக்கு முன்பாக எனக்கு இரக்கம் கிடைக்கப் பண்ணியருளும் என்று பிரார்த்தித்தேன். நான் ராஜாவுக்கு பான பாத்திரக்காரனாயிருந்தேன் என்று நெகேமியா ராஜாவுக்கு முன்பாக இரக்கம் கிடைப்பதற்கும் முன்பாக தேவனை நோக்கி ஜெபம் பண்ணி இந்த மனுஷருக்கு முன்பாக இரக்கம் கிடைக்கப் பண்ணியருளும் என்கிறான். எருசலேம்

அலங்கம் இடிபட்டு நகரம் சுட்டெரிக்கப்பட்டு போய் கிடக்கிறது. இதற்காக இதைக் கட்டி எழுப்ப ராஜாவிடம் பேச வேண்டும், அவர் கண்களில் இரக்கம் கிடைக்கப் பண்ணியருளும் என்று ஜெபம் பண்ணின போது ராஜாவே ஏன் துக்கமுகமா யிருக்கிறாய். இது மனதின் துக்கமே தவிர வேறில்லை என்று விசாரித்து நெகேமியா கேட்கும் லீவு கொடுத்து இரக்கம் காண்பித்ததை வாசிக்கிறோம். நம் வாழ்விலும் மனுஷருக்கு முன்பாக என்ன இரக்கம் தேவையோ அதை நமக்கும் கிடைக்கப் பண்ணுவார்.

யாக்கோபு எகிப்தில் தானியம் விற்கப்படுகிற செய்தி அறிந்து தன் குமாரர்களை அனுப்பிய போது யோசேப்பு உயிரோடு இருக்கிறதை அறியாத அவன் சகோதரர். சிமியோன் கட்டப்பட்டதும் இளையவன் பென்யமீனை அழைத்து வர அவர் கட்டளை யிட்டார் என்ற செய்தியினாலும் யாக்கோபு மனமுடைந்து போய் இருந்தான். எகிப்தில் தானியம் வாங்கி விற்றால் தான் சாப்பிட முடியும் என்ற இக்கட்டில் வேறு வழியின்றி யோசேப்பை காணவில்லை. சிமியோன் எகிப்தில் இருக்கிறான். இப்போது பென்யமீனையும் இழந்து விடுவானோ என்று கலங்கும் போது **ஆதி 43:14-ல் அந்த மனிதன் அங்கிருக்கிற மற்ற சகோதரனையும், பென்யமீனையும் உங்களுடனே அனுப்பி விடும்படிக்கு சர்வ வல்லமையுள்ள தேவன் அவன் சமூகத்தில் உங்களுக்கு இரக்கம் கிடைக்க பண்ணுவாராக! நானோ பிள்ளையற்றுப் போனவனைப் போல் இருப்பேன் என்றான்.** யாக்கோபு சொன்னது போல அந்த மனிதன் யோசேப்பு சிமியோனை கட்டவிழ்த்து, பென்யமீனை அனுப்பி யாக்கோபையும் அழைத்து வர வண்டியனுப்பி யோசேப்பு உயிரோடு இருக்கிற செய்தியை கேட்க, அதைப் (அவனை) பார்க்க இரக்கம் கிடைக்க பண்ணினார். அதே தேவன் உங்களுக்கும் இரங்குவார்.

இன்றைக்கு பல்வேறு பாடுகளில் சிக்கி வேதனையோடு போய்க் கொண்டிருக்கிறீர்களா? யாக்கோபை போல பிள்ளைகள் வாழ்க்கையால் பல்வேறு பாதிப்புகளை அடைந்திருக்கிறீர்களா? தேவனே யாக்கோபுக்கு இரங்கினீரே எனக்கும் இரங்கும் என்று ஜெபம் பண்ணுங்கள். தேவன் இரங்குவார். மனிதருக்கு முன்பாக இரக்கம் உண்டாகச் செய்வார். **ரோம 11:32 எல்லார் மேலும் இரக்கமாய் இருக்கத்தக் கதாக தேவன் எல்லாரையும் கீழ்படியாமைக்குள்ளே அடைத்து போட்டார்** என்று பவுல் எழுதுகிறார். கடந்த காலத்தில் நம்முடைய கீழ்படியாமை மூலமாக பல பாதிப்புகளை நாம் சந்தித்திருக்கலாம். நான் கீழ்படியாமல் போனேனே! அதனால்தான் இத்தனை பிரச்சனை என்ற உணர்வு உங்களுக்குள் வருகிறதா? மனம் கலங்காதீர்கள்! உங்கள் மேல் தான் தேவன் இரக்கமாயிருக்கிறார். அவர் உங்களை கைவிடுவதில்லை. **ஏசா 54:7,8-ல் இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன் ஆனாலும் உருக்கமான இரக்கங்களால் உன்னை சேர்த்துக் கொள்வேன். அற்பகாலம் மூண்ட கோபத்தினால் என் முகத்தை இமைப்பொழுது உனக்கு மறைத்தேன். ஆனாலும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன் என்று கர்த்தராகிய உன் மீட்பர் சொல்லுகிறார்** என்ற வார்த்தையின்படி இந்த செய்தியை வாசிக்கிற ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் தேவனுடைய மகாபெரிய இரக்கங்கள் சூழ்ந்து கொள்வதாக!



### வானத்தின் வாசலில் நடைபெற்ற

# சுவிசேஷ ஜெப முகாம்

தேசத்தின் இருளைப் போக்க, சுவிசேஷ ஒளியை பரவச் செய்ய, தேவ திட்டமும் சித்தமும் நிறைவேறும் வண்ணமாகவும், சகோதரர் வின்சென்ட்ராஜ் அவர்களுக்கு தேவன் கொடுத்ததான ஆத்துமபாரமும், சுவிசேஷ தாகமும் நிறைவேறும் விதத்தில் சில வருடங்களாக சுவிசேஷ பயிற்சி பள்ளியை தொடர்ந்து நடத்தவும், அதன் மூலம் அநேக சுவிசேஷகர்களை உருவாக்கவும் தேவன் கிருபை செய்தார். அது மட்டுமல்ல அப்படி உருவாக்கப் பட்ட சுவிசேஷகர்களையும் சுவிசேஷகிகளையும் அழைத்து, ஒன்று சேர்ந்து அவர்களை தேவனுடைய பாதத்தில் இரண்டு நாட்கள் தங்கி உபவாசித்து ஜெபிக்கவும், ஆவியில் பெலனடையவும், அவர்கள் இன்னும் கர்த்தருக்காக வைராக்கியமாக எழும்பி செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தை சகோதரருக்கு தேவன் தந்தார்.

அதன்படி கடந்த அக்டோபர் 1, 2 தேதிகளில் நம் தேசத்தின் பல மாநிலங்களில் இருந்து அநேக சுவிசேஷகர்களும் சுவிசேஷகிகளும் கூட்டிச் சேர்க்கப் பட்டார்கள். இரண்டு நாட்களும் தேவ சமூகத்தில் காத்திருந்து உபவாசித்து ஜெபிக்கவும் தேவத் திட்டத்தை புரிந்து கொள்ளவும் தேவன் அநுக்கிரகம் செய்தார். நம் சகோதரர் வின்சென்ட்ராஜ் அவர்கள் மூலமாக தேவன் அழைப்பை பற்றியும், மூன்று விதமான ராஜ்யங்களை பற்றியும் தெளிவாய் கற்றுக்கொடுத்து அநேகருடைய அழைப்பை அவர்கள் புரிந்து கொள்ள, உறுதிப்படுத்திக் கொள்ள தேவன் கிருபை செய்தார்.

நம் சகோதரி கலா வின்சென்ட்ராஜ் அவர்கள் சுவிசேஷத்தின் வகைகளை பற்றியும்,, சுவிசேஷத்தை எந்த இடத்தில் யாருக்கு எப்படி சொல்ல வேண்டும் என்பதை போதித்து மக்களை ஜெபத்தில் நடத்தினார்கள். இறுதியாக தீர்க்கதரிசி வின்சென்ட் செல்வகுமார் அவர்கள் எழுப்புதலின் ஜீவன் சுவிசேஷம் என்பதையும், கடைசி காலத்தைக் குறித்த தெளிவு நமக்கு உண்டாக வேண்டும் என்பதை பற்றி தெளிவாக ஆவியானவர் அவர்கள் மூலமாய் கற்றுக் கொடுத்தார். மேலும் பரிசுத்த ஆவியானவர் நான்கு விதமான அபிஷேகத்தை ஜனங்கள் மீது ஊற்றி அவர்களை பெலனடையச் செய்தார். தேசங்களுக்குள் சுவிசேஷ ஒளியை பரவச் செய்ய அவர்களை வல்லமையால் நிரப்பினார். இந்த முகாமை இவ்வளவு நேர்த்தியாய் நடத்தித் தந்த தேவனுக்கு கோடான கோடி நன்றி.





Jesus Lives







**சாட்சி பகுதி**

# நம்பியவர்களுக்கு தேவன் செய்த அற்புதங்கள்



**சகோதரி - தேவி - சமயநல்லூர்**

கடந்த நாட்களில் என் மகனுக்கு விபத்து ஏற்பட்டது. அவனுக்கு அதிகமான காயங்கள் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தான். நான் கர்த்தரிடத்தில் அவனுடைய சுகத்திற்காக ஜெபித்தேன். தங்களிடமும் அவனுக்காக ஜெபிக்க சொல்லிக் கேட்டேன் அவர் மனம் இரங்கி அவனுக்கு பரிபூரண சுகத்தை கொடுத்தார். அவன் வீட்டிற்கு வந்து விட்டான். பின்பு எனக்கு விபத்து ஏற்பட்டு மிகவும் கஷ்டப்பட்டேன், ஆனாலும் கர்த்தர் இந்த விபத்தில் இருந்து எங்கள் இருவரின் (ஜீவனையும்) உயிரையும் காப்பாற்றினார் கர்த்தருக்கு கோடான கோடி நன்றி.

**சகோதரி - அன்னாள் - அலங்காநல்லூர்**

நான் கடந்த மாதத்தில் ஒரு நாள் படியிலிருந்து கீழே விழுந்து விட்டேன். என் தலையில் அடிபட்டு இரத்தம் கொட்டியது. எனக்கு உதவி செய்யவும் அருகில் ஆட்கள் இல்லை. ஆபத்து காலத்திலே என்னை நோக்கி கூப்பிடு நான் உன்னை விடுவிப்பேன் என்ற வார்த்தையைச் சொல்லி தலையில் கை வைத்து நம்பிக்கையோடு ஜெபம் பண்ணினேன். தங்களிடமும் எனக்காக ஜெபிக்க சொல்லிக் கேட்டேன் ஜெபம் முடித்தவுடன் அப்படியே இரத்தம் நின்று விட்டது.
கர்த்தர் அற்புதமான சுகத்தை எனக்கு கொடுத்தார் கர்த்தருக்கு நன்றி.

**சகோதரி - ஹெலன்சியா - திருநெல்வேலி**

கடந்த மாதத்தில் பல நாட்கள் எனக்குள் ஒரே போராட்டமாக இருந்தது. என்னால் நிம்மதியாக தூங்க முடியாது. ஒரே பயமும், பதட்டமுமாக இருந்து கொண்டே இருந்தது. மனதிலும், சிந்தையிலும் ஏற்பட்ட மரணப்போராட்டத்திலிருந்து என்னால் வெளிவரவே முடியவில்லை. அப்பொழுது நான் தங்களுடன் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு எனக்காக ஜெபிக்க சொன்னேன். சகோதரி அவர்களும் பாரத்தோடு ஜெபித்தார்கள். எனக்கு ஆலோசனையும் கொடுத்தார்கள். அவர்கள் சொன்ன ஆலோசனையை கேட்டு அதன்படி நான் என்னுடைய எல்லா காரியங்களையும் அறிக்கையிட்டு தேவனோடு ஒப்புரவானேன். தேவன் எனக்கு மரணபயத்திலிருந்து. சத்துருவின் பயமுறுத்துதல்களிருந்தும் விடுதலை தந்தார்
தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

## இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவச் செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார். அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில்தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (1 கொரிந்தியர் 3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபட வேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | | |
|---|---|---|
| A/C NAME | : | JESUS LIVES TRUST |
| BRANCH | : | KOCHADAI MADURAI |
| BANK NAME | : | UNION BANK OF INDIA |
| A/C.NO | : | 49390201001022 |
| IFSC CODE | : | UBIN0549398 |

| | | |
|---|---|---|
| A/C NAME | : | L.VINCENT RAJ |
| BRANCH | : | MADURAI |
| BANK NAME | : | AXIS BANK |
| A/C.NO | : | 109010100247030 |
| IFSC CODE | : | UTIB0000109 |

## 3) காசோலை(CHEQUE):

JESUS LIVES TRUST
OR
L.VINCENT RAJ

## 4) GOOGLE PAY :

GPAY TO , 944 300 9333,

## 5) மணியார்டர்(E.M.O)

இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர்,
ஏ – காலனி பரவை ,
மதுரை – 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது **GOOGLE PAY** மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை **944 2800 449** என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு **WHATSAPP** மூலமாகவோ, **accounts@jesuslives.in** மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

நடப்பு செய்தி

# ரொக்கம் இல்லா பொருளாதாரத்தை நோக்கி இந்தியா




**இந்தியாவில் 99% பணப்பரிவர்த்தனை டிஜிட்டல் வாயிலாக உள்ளன; 85% யுபிஐ மூலம் நடைபெறுகிறது**

ரொக்கம் இல்லா பொருளாதாரத்தை நோக்கி இந்தியா வேகமாக முன்னேறி வருகிறது. 2024-ம் ஆண்டில் நாட்டில் 99.7% பணப்பரிவர்த்தனைகள் டிஜிட்டல் வழியே மேற்கொள்ளப்பட்டதாக இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள புதிய அறிக்கை தெரிவிக்கிறது.




மொத்தத் தொகையின் அடிப்படையில் இந்த இலக்கம் 97.5% ஆகும். ரொக்கம் மற்றும் காசோலைகளை மக்கள் தற்போது குறைவாகப் பயன்படுத்துவதை இது உணர்த்துகிறது. இந்த அறிக்கையின்படி, 2025-ம் ஆண்டில், முதல் ஆறு மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட மொத்த டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் யுபிஐ பங்களிப்பு 84.8% ஆகும். நிகழ்நேர பணப்பரிவர்த்தனை என்ற ஆர்டிஜிஎஸ் 0.1%, அட்டைகள் 2.7%, காசோலைகள் 0.2% பங்களிப்பை வழங்கின. எனினும் பரிமாற்றத்தொகையின் அடிப்படையில் 68.7% ஆர்டிஜிஎஸ் வாயிலாக மேற்கொள்ளப்பட்டன. 2019-ன் முதல் ஆறு மாதங்களில் 1,424 கோடியாக இருந்த டிஜிட்டல் பரிமாற்றங்கள், 2025-ல் 12,520 கோடியாக அதிகரிக்கும் என்று அறிக்கை கூறுகிறது. மொத்தப் பரிமாற்றங்களில் அதன் பங்களிப்பு 2019-ல் 96.7% ஆக இருந்தது, 2015-ல் 99.8% ஆக உயர்ந்துள்ளது. அதே நேரம் 2019-ல் 441.6 கோடியாக இருந்த யுபிஐ பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை, 2025-ல் 10,637 கோடியாக அதிகரித் துள்ளது. அளவின் அடிப்படையில் யுபிஐ பரிவர்த்தனைகளின் மதிப்பு 2019 முதல் அரையாண்டில், 8 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது 2025-ல் 143 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.






Owned & Published by: Bro.L.VincentRaj , & Editor Bro.L.VincentRaj
Published by Jesus Lives Trust, Yesuval Thinam Parkiren
54,A.I.B.E.A-Nagar,Paravai,Madurai - 625402
Printed by: SHARON PRINT SYSTEM, NO. 51/7,AHIMSAPURAM
FIRST STREET, EXTENSION, NEAR SARASWATHI THEATER,
SELLUR, MADURAI - 625002


Jesus Lives
MINISTRIES
கோவை
புதுவருட
ஆசீர்வாத கூட்டம்
ஜனவரி
03
சனிக்கிழமை
6:00 PM
இடம்:
தங்கமணி
திருமண
மண்டபம்,
பண்ணிமடை ரோடு,
துடியலூர், கோவை
EVG.
VINCENTRAJ
EVG.
KALAVINCENT
தொடர்புக்கு : 94428 00449, 9087989149


Jesus Lives
MINISTRIES
திருப்பத்தூரில்
பிப்ரவரி
5,6,7
75 வது
பரிசுத்த
உபவாச முகாம்
வியாழன்,
வெள்ளி,சனிக்கிழமை
காலை 5:00 AM முதல்
EVG VincentRaj
இடம்:
அன்றன்றுள்ள அப்பம் ஜெப மண்டபம்,
சகோ. சாம் ஜெபத்துரை நினைவு மண்டபம்,
கிறிஸ்துகுல ஆசிரமம், திருப்பத்தூர் மாவட்டம், வேலூர் அருகில்.
தொடர்புக்கு : 94428 00449, 9884916777,

RNI NO .TNTAM/2000/00621
PERIODICALS ACT, 2023




**இடம்:** இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம் பைபாஸ் ரோடு, பழங்காநத்தம்
**PRC Depot** அருகில், மதுரை

தொடர்புக்கு : 94980 00449, 94428 00449

**TO**

If Undelivered (Please Return To)
YESUVAI THINAM PARKIREN
54,A.I.B.E.A Nagar,Paravai
Madurai-625402
South India.